708 நகர்ப்புற மருத்துவ நிலையங்கள்: சிறப்புக் குழுக்கள் அமைப்பு

சென்னை, நவ. 14: தமிழகம் முழுவதும் 708 நகர்ப்புற மருத்துவ நிலையங்களை அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்ய சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான அரசாணையை மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ப.செந்தில்குமார் வெளியிட்டுள்ளார்.

கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப் போல் நகர்ப்புறங்களில் மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே 708 மருத்துவ நிலையங்கள் அமைக்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப் பேரவையில் அறிவித்தார்

முதல்கட்டமாக, சென்னை பெருநகர மாநகராட்சி உள்பட 21 மாநகராட்சிகள், 63 நகராட்சிப் பகுதிகளில் அவை ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். அந்த 708 மருத்துவ நிலையங்களிலும் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் புறநோயாளிகள் மருத்துவ சேவை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு நகர்ப்புற மருத்துவ நிலையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு மருந்தியல் நிபுணர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட உள்ளனர். இதற்காக ரூ. 148 கோடி நிதி விடுவிக்கப்பட்டது.

இந்த நிலையில், அந்த மருத்துவ நிலையங்களுக்கான இடங்களைத் தேர்வு செய்ய சிறப்புக் குழுக்களை அமைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னையைப் பொருத்தவரை மாநகராட்சி உதவி/இணை ஆணையர் (சுகாதாரம்), மாவட்ட வருவாய் அலுவலர், பொது சுகாதாரத் துறை அலுவலர், நகர சுகாதார அதிகாரி உள்பட 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பிற இடங்களில் மாநகராட்சி ஆணையர்கள், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள், நகராட்சி ஆணையர்கள் உள்பட 6 பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களானது, சம்பந்தப்பட்ட இடங்களில் ஆய்வு செய்து அதுகுறித்த அறிக்கையை தேசிய நல்வாழ்வு குழுமத்துக்கு அளிக்க வேண்டும் என்றும், அதைப் பரிசீலித்து, தகுதியான இடங்களை தேசிய நல்வாழ்வுக் குழும திட்ட இயக்குநர் இறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களைத் தேடி மருத்துவம்

45 லட்சம் சர்க்கரை நோயாளிகளை கண்டறிந்து சிகிச்சை

சென்னை, நவ. 14: மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் புதிதாக 45 லட்சம் சர்க்கரை நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சையளித்து வருவதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உலக சர்க்கரை நோய் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று சர்க்கரை நோயாளிகளுக்கு குளுக்கோமீட்டர் கருவிகளை வழங்கினார். தொடர்ந்து சர்க்கரை நோய் விழிப்புணர்வு விநாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மருத்துவ, செவிலியர் மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு, மருத்துவமனை முதல்வர் சாந்திமலர், கண்காணிப்பாளர் ஆயிஷா ஷாகின், நிலைய மருத்துவ அதிகாரி வாணி, சர்க்கரை நோய் துறைத் தலைவர் அ.சண்முகம், மருத்துவர்கள், செவிலியர்கள் பங்கேற்றனர்.

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் திங்கள்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில், நோயாளி ஒருவருக்கு குளுக்கோமீட்டர் கருவி வழங்கிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். உடன், மருத்துவமனை முதல்வர் டாக்டர் சாந்திமலர், கண்காணிப்பாளர் ஆயிஷா ஷாகின் உள்ளிட்டோர்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியதாவது:

இன்சுலின் மருந்தைக் கண்டுபிடித்த டாக்டர் பிரெடரிக் பாண்டிங் பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் தேதி ஆண்டுதோறும் சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்தியாவில் சர்க்கரை நோய் தாக்கத்துக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 10 முதல் 12 சதவீதமாகவும், தமிழகத்தில் 13 சதவீதமாகவும் உள்ளது.

தமிழக முதல்வர் தொடங்கிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தால் சர்க்கரை நோயாளிகளைக் கண்டறிந்து உரிய சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாக சர்க்கரை நோய் கண்டறியப்பட்டவர்கள் 26,40,727 பேர். சர்க்கரை நோய், ரத்த அழுத்த நோய் பாதிப்புள்ளவர்கள் என அறியப்பட்டவர்கள் 19,26,136 பேர்.

மொத்தமாக சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று கண்டறிப்பட்டவர்கள் 45,66,863 பேர். தமிழகத்தில் உள்ள மக்கள் தொகையில் மக்களைத் தேடி மருத்துவ திட்டத்தின் கீழ் 72 சதவீதம் பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்.

சர்க்கரை நோயை கட்டுப்பாட்டுக்குள் வைக்க உடற்பயிற்சி, உணவு முறை, தேவைப்படும்பட்சத்தில் மாத்திரை, மருந்துகள், இன்சுலின் எடுத்து கொள்ள வேண்டும்.

சர்க்கரை நோய் உள்ள நபர்கள் மாத்திரை மருந்துகள் இல்லாமல் எப்படி ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருப்பது என்பது குறித்த ஆராய்ச்சிகள் சர்வதேச அளவில் நடைபெற்று வருகின்றன என்றார் அவர்.

புறநகரின் சில பகுதிகளில் நீர் தேங்கியதற்கு அதிமுகவே காரணம்

அமைச்சர் தா.மோ.அன்பரசன்

சென்னை, நவ. 14: சென்னை புறநகரின் சில பகுதிகளில் மழைநீர் தேங்கியதற்கு கடந்த அதிமுக ஆட்சியே காரணம் என்று அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

ஆலந்தூர் தொகுதிக்கு உள்பட்ட கொளப்பாக்கம், முகலிவாக்கம் ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. இந்த நீரை அகற்றும் பணிகள் நடந்து வந்த நிலையில், அதை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி திங்கள்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, தமிழக அரசு மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இதற்கு பதிலளித்து, செய்தியாளர்களிடம் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியதாவது:

ஆலந்தூர் தொகுதிக்குள்பட்ட கொளப்பாக்கம் கணேஷ் நகர், முகலிவாக்கம், திருவள்ளுவர் நகர், ஆறுமுகம் நகர் ஆகிய 3 பகுதிகளில்தான் மழைநீர் தேங்கியுள்ளது.

இதற்குக் காரணம் மாங்காடு, பூந்தமல்லி, காட்டுப்பாக்கம் பகுதிகளில் தேங்கும் மழைநீர் போரூர் ஏரிக்கு வர வேண்டும்.

இதற்காக மதுரவாயல் புறவழிச் சாலையில் உரிய வடிகால் வசதிகள் அதிமுக ஆட்சியில் அமைக்கவில்லை. இதற்கு எல்லாம் காரணம் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமிதான்.

தற்போது வடிகால் பணிகளைத் தொடங்கியுள்ளோம். அரசியல் செய்ய வேண்டும் என்ற காரணத்தால் எங்கள் மீது அவர் குற்றம் சுமத்துகிறார் என்று அமைச்சர் அன்பரசன் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியல்: பெயர் சேர்க்க 16 ஆயிரம் பேர் விண்ணப்பம்

சென்னை, நவ. 14: சென்னையில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமில் 16,327 பேர் புதிதாக பெயர் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர்.

சென்னை மாவட்டத்தை உள்ளடக்கிய 16 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது.

அதில், 19.15 லட்சம் ஆண் வாக்காளர்கள், 19.75 லட்சம் பெண் வாக்காளர்கள், 1,058 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 38.92 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ள கடந்த 12, 13 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. இந்த முகாமில், 23,519 பேர் நேரடியாக விண்ணப்பித்துள்ளனர்.

அதில், புதிய வாக்காளர்களாக இணைய 16,327 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

பெயரை திருத்துதல், புகைப்படத்தை மாற்றுதல், முகவரியை மாற்றுதல் போன்ற திருத்தங்களுக்கு 7,192 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த வாக்காளர் சிறப்பு முகாமைத் தவறவிட்டவர்கள் வரும் 26, 27 ஆகிய தேதி தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாமைப் பயன்படுத்தி கொள்ளலாம் என்று மாநகராட்சி தெரிவித்துள்ளது.

சாலை சீரமைப்பு...

சென்னை மாதவரம் செங்குன்றம் சாலையில் திங்கள்கிழமை, பொக்லைன் இயந்திரத்தின் உதவியுடன் மழை வெள்ளத்தை அப்புறப்படுத்தி, சீரமைப்புப் பணியில் ஈடுபட்ட நெடுஞ்சாலைத் துறையினர்.

'333 பேருக்கு முன் வேலைவாய்ப்பு'

சென்னை, நவ. 14: சென்னை ஐஐடியில் 2022-2023-ஆம் கல்வியாண்டில் முன் வேலைவாய்ப்புகளை (Pre-Placement offers) பெறும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நிகழ் கல்வியாண்டில் கடந்த நவ. 13-ஆம் தேதி வரை 333 பேர் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர்.

இதுகுறித்து சென்னை ஐஐடி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

சென்னை ஐஐடியில் கடந்த 2021-2022-இல் மொத்தம் 231 மாணவர்கள் மட்டுமே முன்வேலை வாய்ப்புகளை பெற்றிருந்த நிலையில், நிகழ் கல்வியாண்டில் 333 பேருக்கு (நவ. 13 நிலவரப்படி) கிடைத்துள்ளது. இந்த அளவுக்கு முன் வேலை வாய்ப்புகளின் செயல்திறன் இருப்பதற்கு இந்தக் கல்வி நிறுவனத்தின் உறுதியான உள்ளக பயிற்சித் திட்டம் முக்கிய காரணம்.

ஆராய்ச்சி, மேம்பாடு துறையில்தான் பெரும்பாலான முன்வேலைவாய்ப்பு இடங்கள் பெறப்பட்டுள்ளன. குவால்காம், மைக்ரோசாப்ட், ஹனிவெல், டெக்சாஸ் இன்ஸ்ட்ரூமெண்ட்ஸ், கோல்ட்மேன் சாக்ஸ் ஆகிய நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் மாணவர்களைத் தேர்வு செய்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுந்தரம் - கிளேட்டன் லிமிடெட்
பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண். 12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600006, இந்தியா. தொலைபேசி : 044 - 2833 2115; தொலைநகல் : 044 - 2833 2113.
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com; இணையதளம் : www.sundaram-clayton.com
CIN: L35999TN1962PLC004792
நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு
நிறுவன விண்ணப்பம் CA(CAA)/61(CHE)/2022
நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்
சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் மற்றும் டிவினஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும்
வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும்
அவைகளின் முறையே பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடைமிலான கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில்
சுந்தரம் கிளேட்டன் லிமிடெட்
1956ம் ஆண்டு நிறுவன சட்டத்தின்படி
CIN : L35999TN1962PLC004792 உடன் நிறுவப்பெற்றது
"சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600 006, இந்தியா
என்ற முகவரியில் பதிவு அலுவலகம் கொண்டுள்ளது
...நிறுவனம் / பரிமாற்றம் பெறும் நிறுவனம் / பிரிக்கப்பட்ட நிறுவனம் / SCL
நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு பிரகரம்
இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், 2022 நவம்பர் 09ம் தேதியன்று மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு ("தீர்ப்பாயம்") பிறப்பிக்கப்பட்ட ("தீர்ப்பாய ஆணை") ஆணையால், நிறுவனங்களின் சட்டம் 2013 ("சட்டம்") பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான விதிகளின் கீழ், சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் ("நிறுவனம்") மற்றும் டிவினஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும் அவைகளின் பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடைமிலான உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில் ("திட்டம்") கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்கும் நோக்கத்தோடு நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டத்தை நடத்திட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.
மேலும் தீர்ப்பாயத்தின் ஆணையின்படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டமானது ("கூட்டம்") வருகின்ற 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 10.00 மணிக்கு (இந்திய நேரப்படி), காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சம்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக மேற்சொன்ன சட்டத்தின் பொருந்தத்தக்க விதிகள் மற்றும் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (கடமைகளை பட்டியலிடல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்தல்) ஒழுங்காற்றுமுறைகள் 2015 மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் (MCA)ன் பொருந்தத்தக்க சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டு, அவ்வறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக நடைபெறவுள்ளது என்பதை அறியவும்.
தீர்ப்பாயத்தின் ஆணை மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும், மேற்சொன்ன கூட்டத்துக்கான அறிவிப்பு மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியன ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கு தூதஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.
மேற்சொன்ன சட்டம் பிரிவு 230 மற்றும் 232 - மற்றும் - பிரிவு 102 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் - நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016ன் விதி எண் 6 ("CAA விதிகள்")ன் கீழ் திட்ட விபர நகல், அறிக்கை மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றை நிறுவனத்தின் இணையதளம் www.sundaram-clayton.com, மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் கூட்டம் நடத்துவதற்கான இதர வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நிறுவனத்தால் பணிமமர்த்தப்பட்ட முகமையாக செயல்படும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)ன் இணையதளம் www.evoting.nsdl.com, பங்கு பரிவர்த்தனைகளுக்கான இணையதளம் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com மற்றும் தேசிய பங்கு பரிவர்த்தனை நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விரும்பினால், மேற்சொன்ன சட்டம் பிரிவு 230 மற்றும் 232 - மற்றும் - பிரிவு 102 மற்றும் CAA விதிகளின் விதி எண் 6ன் கீழான திட்ட விபர நகல், அறிக்கை ஆகியவற்றின் காகித வடிவ நகலை இலவசமாக நிறுவனத்தின் பதிவு பெற்ற அலுவலகத்திலிருந்தோ அல்லது நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி corpsec@sundaramclayton.comக்கு மின்னஞ்சல் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.
தீர்ப்பாயம் திரு. N. P. விஜய் குமார், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்தின் தலைவராகவும், திரு. R. ராஜேஷ், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்துக்கான ஆய்வாளராகவும் செயல்படுவார்.
இதன் மேற்குறிப்பிட்ட திட்டம், நிறுவனத்திற்கு ஈட்டுறுதி பங்குதாரர்களின் அங்கீகரிக்கப்பட்டால், அது தீர்ப்பாயத்தின் பின்னிட்ட அனுமதி மற்றும் ஒழுங்காற்று மையம் அல்லது இதர அதிகார அமைப்புகளின் (தேவைப்படும் பட்சத்தில்) இதர அங்கீகரிப்புகள், அனுமதிகள் மற்றும் இசைவுகளுக்கு கட்டுப்பட்டது.
நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்கள் அறிவிப்பில் உள்ள அறிவுரைகளை பின்பற்றி, கூட்ட தேதிக்கு முன்பே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலமோ அல்லது மின்னணு வாக்களிப்பு மூலமாக கூட்டத்திலோ தங்களது வாக்குகளை அளிக்கலாம். கூட்டமானது காணொளி காட்சி மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் மூலமாக நடைபெறுவதால், ஈட்டுறுதி பங்குதாரர்களின் நேரடி பங்கேற்புக்கு விலக்களிப்பட்டுள்ளது. அதனால், ஈட்டுறுதி பங்குதாரர்கள் பதிலாள் நியமிக்கப்படும் வசதி இக்கூட்டத்துக்கு இல்லை. ஒரு உறுப்பினர், தனது வாக்களிப்பு உரிமையை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் செலுத்திய பிறகு இக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதியில்லை.
மேற்சொன்ன கூட்டத்திற்கான மின்னணு வாக்களிப்புக்கான கடைசி தேதி மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான நேர விபரம் கீழ்க்கண்டவாறு :

ஈட்டுறுதி பங்குதாரர்களுக்கான கூட்டம்	
மின்னணு வாக்களர்கள் பட்டியல் வரையறுக்கப்பட்ட தேதி	டிசம்பர் 09, 2022 வெள்ளிக்கிழமை
தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம்	டிசம்பர் 13, 2022 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி (இந்திய நேரப்படி)
தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவுறும் தேதி மற்றும் நேரம்	டிசம்பர் 15, 2022 வியாழக்கிழமை மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி)

மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் இதன் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு, NSDLஆல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை செயலிழப்பு செய்யப்படும்.
வரையறுக்கப்பட்ட தேதியன்று அதாவது டிசம்பர் 09, 2022 - வெள்ளிக்கிழமை நிலவரப்படி, நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஈட்டுறுதி பங்குதாரர்கள் மட்டுமே, இந்த அறிவிப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது தனது வாக்களிப்பு உரிமையை செயலுறுத்தவும், கூட்டத்தில் பங்கேற்கவும் தகுதியுடையவராவார். ஈட்டுறுதி பங்குதாரர்களின் / பயன்பாட்டு உரிமையாளர் (மின்னணு முறையிலான பங்குதாரர்களாக இருக்கும் பட்சத்தில்) வாக்களிப்பு உரிமையானது, வரையறுக்கப்பட்ட தேதியன்று நிறுவனத்தில் உள்ள அவரது மூலதன ஈட்டுறுதி பங்குகளின் விகிதாச்சார வீதத்திலானது. நிறுவனத்தால் இக்கூட்டத்திற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு அது பெறப்பட்டதற்கு பிறகு பங்குகளை பெற்று, நிறுவனத்தின் ஈட்டுறுதி பங்குதாரர்களாக மாறி, உறுப்பினர்களின் பதிவேடு அல்லது பயன்பாட்டு உரிமையாளர்களின் பதிவேட்டில் (வரையறுக்கப்பட்ட தேதி நிலவரப்படி) தமது பெயர்கள் இடம் பெற்றுள்ள நபர்கள் நிறுவனத்தின் இணையதளம் அல்லது NSDLன் இணையதளத்தில் கூட்டத்திற்கான அறிவிப்பை பார்த்துக் கொள்ளலாம். அவ்வாறான நபர்கள், கூட்டத்திற்கான அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையை பின்பற்றி உள்நுழையச் சொல் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம் / உருவாக்கிக் கொள்ளலாம்.
காகித வடிவிலான பங்குகளை வைத்திருந்து தங்களது மின்னஞ்சல் முகவரிகளை நிறுவனத்தில் பதிவு செய்யாத / புதுப்பிக்காத ஈட்டுறுதி பங்குதாரர்கள், அதனை ஃபோலியோ எண் விபரங்களுடன் கூடிய சுய கையெய்யிட்ட திரந்நர கணக்கு அட்டை நகலையும் கொண்ட எழுத்து மூல விண்ணப்பத்தை நிறுவனத்திற்கு அதாவது இண்டிகிரேட்டட் ரெஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் நிறுவனத்தின் பங்கு பரிமாற்ற முகமைகளுக்கும் அதாவது srirams@integratedindia.in அல்லது நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி corpsec@sundaramclayton.comக்கு கொடுத்து பதிவு செய்து கொள்ளுமாறு / புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
காகித முறையில் பங்குகளை வைத்திருந்து, தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பங்கேற்பாளர்களின் வைப்பகத்தில் பதிவு செய்யாத / புதுப்பிக்காத ஈட்டுறுதி பங்குதாரர்கள், எந்த பங்கேற்பாளர்களின் வைப்பகத்தில் தங்களது டீமேட் கணக்குகளை நிர்வகித்து வருகிறார்களோ அங்கு தமது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளுமாறு / புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
மின்னணு வாக்களிப்பு தொடர்பான விபரங்கள் கோரப்படுமாயின், ஈட்டுறுதி பங்குதாரர்கள் பின்வரும் தொடர்பு விபரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
Ms பல்லவி மாத்ரே, மேலாளர் / திரு. அமித் விஷால், உதவி துணை தலைவர்,
நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்,
டிரேட் வோர்ல்டு, ஏ விங், 4வது தளம், கமலா மில்ஸ் கம்பவுண்டு, லோயர் பரேல், மும்பை -400013,
மின்னஞ்சல் முகவரி : www.evoting.nsdl.com; தொடர்பு எண்கள் : 1800 1020 990 / 1800 224 430
ஒருவேளை இதர விபரம் தொடர்பான விசாரணைகளுக்கு, ஈட்டுறுதி பங்குதாரர்கள் பின்வரும் தொடர்பு விவரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
திரு. ஸ்ரீராம் S, பொது மேலாளர்,
இண்டிகிரேட்டட் ரெஜிஸ்ட்ரீ மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்,
2வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண்.1, ராமகிருஷ்ணா நெரு,
வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 600 017
மின்னஞ்சல் : srirams@integratedindia.in; தொலைபேசி : 044-2814 0801-03; தொலைநகல் : 044-2814 2479
ஒப்பம்/-
திரு. N. P. விஜய் குமார்,
நிறுவனத்தின் கூட்டத்திற்காக
தீர்ப்பாயத்தினால் அமர்த்தப்பட்ட தலைவர்
இடம் : சென்னை
தேதி : 14.11.2022

V.O.CHIDAMBARANAR PORT AUTHORITY
Mechanical & Electrical Engineering Department
E-Tender - NOTICE INVITING TENDER (NIT)

1	Tender No.	MEE/CMEP1/MEC/LINCON/V1/22
2	Tender Type	Providing new Link Conveyor from CJ I, CJ-II & NCB-I conveyors to coal yard near Yellow Gate for handling coal (not meant for TTPS & NTPL) with a stockpiling capacity of 90,000 T on EPC basis and Comprehensive O&M for a period of 5 years
3	Estimated Cost put to tender	Rs.21,19,52,944/-
4	Earnest Money Deposit (EMD)	Rs.42,39,059/- (Rupees Forty Two Lakhs Thirty Nine Thousands and Fifty Nine only). Refer EMD Clause
5	Downloading of Tender document from VOCPT e-tendering website	09.11.2022 to 03.12.2022
6	Pre Bid meeting date & time	18.11.2022 at 15:30 hours
7	Bid Submission end date & time	03.12.2022 at 15:00 hours
8	Bid opening date & time	05.12.2022 at 15:30 hours

For further details, visit Port website www.vocport.gov.in & VOCPT E-Tendering Website https://etenders.gov.in/eprocure/app
CHIEF MECHANICAL ENGINEER

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda
41/9, காரப்பாக்கம் 1-வது பிரதான சாலை & முதல் தெரு, காரப்பாக்கம், போரூர், சென்னை - 600116.
தொலைபேசி : 044-23467 025 / 026
E-mail : porur@bankofbaroda.com
சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்காக)
செக்யூரிட்டைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் 2002 (2வது) ஆர்டினன்ஸ் சட்டம் 2002 (ஆர்டினன்ஸ் 3/2002) சட்டப்பிரிவு 13(12) மற்றும் விதி 9-ன் படி பேங்க் ஆஃப் பரோடா-ன், கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் கடன்தாரரான திரு.K.ஸ்ரீனிவாசன், த/பெ. கண்ணையன்சாமிநாயடு, மற்றும் இணைகடன்தாரரான திருமதி.S.மீனா, க/பெ.K.ஸ்ரீனிவாசன், இருவரின் முகவரி: எண்.225, மூகாம்பிகை நகர், சிக்கராயபுரம், கோவூர், சென்னை - 600 069, ஆகியோர்களுக்கு 24.05.2022 தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள காலக்கடன் 1) (வீட்டுக்கடன்) கணக்கு எண்.56900600001098 -ல் 24.05.2022 அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான ரூ.39,42,140.50 (ரூபாய் முப்பத்து ஒன்பது லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து நூற்று நாற்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்) இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது மற்றும் காலக்கடன் 2) கணக்கு எண்.56900600002548-ல் 24.05.2022 அன்று வரை ரூ.1,80,530.46 (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரத்து ஐநூற்று முப்பது மற்றும் பைசா நாற்பத்து ஆறு மட்டும்) இந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.
கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பேங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவர்கள் பிணை காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 விதி 8 பிர

ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான 4 பேரையும் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு

திருச்சி, நவ. 14: முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையாகி திருச்சி சிறப்பு முகாமில் உள்ள 4 பேரையும் இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் மா. பிரதீப்குமார் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருந்த நளினி, முருகன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் ஆகிய 6 பேர் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, கடந்த 12-ஆம் தேதி விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில், நளினி, ரவிச்சந்திரன் ஆகிய இருவரைத் தவிர மற்ற 4 பேரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள்.

எனவே, அவர்கள் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் உள்ள 4 பேரும் சில கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதாக திங்கள்கிழமை தகவல் பரவியது. ஆதலால் உண்மை நிலவரத்தை அறிய மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் சிறப்பு முகாமுக்குச் சென்று 4 பேரிடமும் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறியதாவது:

முகாமில் உள்ள 4 பேரும் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் குறித்த குறைகளைத் தெரிவித்தனர். உடனடியாக அவற்றை முகாம் நிர்வாகம் செய்து கொடுத்துள்ளது.

இந்த 4 பேரின் விவரங்களும் தற்போது இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 4 பேரும் தங்களது நாட்டின் குடிமகன்கள் தான் என்பதை இலங்கை உறுதி செய்ய வேண்டும். அந்த நாட்டிலிருந்து மேலும் விவரங்கள் கோரப்பட்டாலோ, முகாம் வாசிகளை அனுப்புமாறு கோரினாலோ அதன் அடிப்படையில் அவர்களை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும். 4 பேரில் மூன்று பேர் இலங்கை செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒருவர் மீது (முருகன்) மட்டும் வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கு தொடர்பான நடைமுறைகளும், இலங்கையிலிருந்து கடிதம் வருவதற்கு முன்பாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 நாள்களுக்குள் 4 பேரையும் இலங்கை அனுப்புவதற்கான அனுமதி கடிதங்கள் தயாராகும் என்றார் ஆட்சியர்.

நளினி – முருகன் சந்திப்பு: ஆட்சியர் வருவதற்கு முன்பாக, வேலூரிலிருந்து வழக்குரைஞர் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட 7 பேருடன் வந்திருந்த நளினி, முகாமில் கணவர் முருகனை சந்தித்து கண்ணீர் மல்க நலம் விசாரித்தார்.

இதர 3 பேரிடமும் நலம் விசாரித்தார்.

மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எடப்பாடி பழனிசாமி ஆய்வு

சென்னை,நவ.14: மழையால் பாதிக்கப்பட்ட சென்னை புறநகர் பகுதிகளுக்கு பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக இடைக்கால பொதுச்செயலருமான எடப்பாடி பழனிசாமி திங்கள்கிழமை நேரில் ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணப் பொருள்களை வழங்கினார்.

சென்னை முகலிவாக்கத்தில் தேங்கிய நீரில் நடந்து சென்று, மழை பாதிப்பை பார்வையிட்ட அதிமுக இடைக்காலப் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி.

வடகிழக்கு பருவ மழை காரணமாக சென்னையின் புறநகர் பகுதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. குறிப்பாக, முகலிவாக்கம், கொளப்பாக்கம், பெல்நகர் பகுதிகளில் அதிக அளவில் தண்ணீர் தேங்கி உள்ளது. இந்தப் பகுதிகளில் எடப்பாடி பழனிசாமி முழங்கால் அளவு நீரில் நடந்து சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி உள்ளிட்ட நிவாரணப் பொருள்களை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

சென்னை மாநகர் பகுதியில் ஒரு சொட்டு நீர் கூட தேங்கவில்லை என்று திமுக அரசு கூறுகிறது. ஆனால், மழை நீர் பல இடங்களில் தேங்கி, மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் வடகிழக்கு பருவமழையில் மக்கள் படகுகளில் பயணித்ததாகக் கூறினர். தற்போது முகலிவாக்கம் உள்ளிட்ட பல இடங்களில் படகுகளில்தான் மக்கள் சென்று வருகின்றனர்.

மழை தற்போது குறைவாகத் தான் பெய்துள்ளது.

கனமழை பெய்தால் சென்னை கடுமையாகப் பாதிக்கப்படும். 2,400 கி.மீ. நீளம் வடிகால் கால்வாய்கள் அமைப்பதற்காக அதிமுக ஆட்சியில் திட்டமிட்டு பணிகள் நடைபெற்றன. இதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியிலிருந்து ரூ.3,500 கோடி பெறப்பட்டு, சுமார் 750 கி.மீட்டருக்கு பணிகளை முடித்துள்ளோம். பிறகு ஜெர்மன் நிறுவனத்திடமிருந்து ரூ.1,300 கோடி பெற்று, ஒப்பந்தம் விடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டனர். இப்போது, நாங்கள் அறிவித்த திட்டங்களை ரத்து செய்துவிட்டு, சிங்காரச் சென்னை 2.0 என்று என அறிவித்துள்ளனர்.

இந்த நிதி ஏற்கெனவே அறிவித்த திட்டத்தில் உள்ள ரூ.300 கோடி நிதியை எடுத்துத்தான் செலவிட்டு வருகின்றனர்.

வடிகால் கால்வாய் பணிகளை முழுமையாக நிறைவேற்றியிருந்தால், சென்னையில் வெள்ளநீர் தேங்கியிருக்காது என்றார் அவர். முன்னாள் அமைச்சர்கள் பா.வளர்மதி, பென்ஜமின், முன்னாள் எம்எல்ஏ கே.பி.கந்தன் உள்பட பலர் உடன் சென்றனர்.

வீரப்பன் கூட்டாளிகள் இருவர் விடுதலை

கோவை, நவ.14: கோவை மத்திய சிறையில் கடந்த 26 ஆண்டுகளுக்கும் மேலாக அடைக்கப்பட்டிருந்த சந்தனக் கடத்தல் வீரப்பனின் கூட்டாளிகள் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பெருமாள் ஆண்டியப்பன்

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திலிருந்து அந்தியூர் செல்லும் வழியில் குண்டேரிப் பள்ளம் அணையின் அருகில் வனவர் சிதம்பரநாதன் உள்ளிட்ட மூவர் சந்தனக் கடத்தல் வீரப்பன் கும்பலால் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொலை செய்யப்பட்டனர்.

இது குறித்து ஈரோடு மாவட்டம், பங்களாபுதூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இதில், மேட்டூர் அருகே வசித்து வந்த சந்தனக் கடத்தல் வீரப்பனின் அண்ணன் மாதையன், ஆண்டியப்பன் (54), பெருமாள் (59) ஆகிய மூவர் கைது செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் மூவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் மாதையனுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் அவர் கோவை மத்திய சிறையிலிருந்து சேலம் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டிருந்தார். பின்னர் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாதையன் அண்மையில் உயிரிழந்தார்.

இதற்கிடையே ஆண்டியப்பன், பெருமாள் ஆகிய இருவர் சிறையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக இருப்பதால் அவர்களை விடுவிக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

முன்னாள் முதல்வர் அண்ணா பிறந்த நாளையொட்டி நன்னடத்தை காரணமாக சிறைக் கைதிகள் பலரும் விடுதலை செய்யப்பட்டு வந்த நிலையில், இவர்கள் இருவரையும் சிறையிலிருந்து விடுவிக்குமாறு சிறைத் துறை அதிகாரிகளுக்கு கடந்த சனிக்கிழமை தகவல் வந்துள்ளது. அதன் பேரில் சிறைத் துறை அதிகாரிகள், ஆண்டியப்பன், பெருமாள் ஆகிய இருவரையும் திங்கள்கிழமை விடுதலை செய்துள்ளனர்.

பிரதமர் மோடி, அமித் ஷாவை சந்தித்ததில் மனநிறைவு

திருப்பரங்குன்றம், நவ. 14: தமிழகம் வந்த பிரதமர் நரேந்திர மோடியையும், மத்திய அமைச்சர் அமித் ஷாவையும் சந்தித்துப் பேசியது மனநிறைவாக இருந்தது என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

சென்னை செல்வதற்காக திங்கள்கிழமை மதுரை வந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மதுரை விமான நிலையத்தில் நான் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசியது என் அருகில் இருந்தவர்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினருக்கும் தெரியும்.

எங்களது ஆதரவாளர்கள் மகிழ்ச்சியாக உள்ளனர்.

தமிழகம் வந்த பிரதமர் நரேந்திர மோடியையும், மத்திய அமைச்சர் அமித் ஷாவையும் சந்தித்துப் பேசியது மனநிறைவாக உள்ளது. பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்பட்ட வகுப்பினருக்கான 10 சதவீத இட ஒதுக்கீடு விவகாரத்தில் அரசு சார்பில் மேல் முறையீடு செய்ய வேண்டும் என்றார் அவர்.

பாரதீய கன்டெய்னர் நிகம் லிமிடேட்
கன்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிட்.
भारत सरकार का नवरत्न उद्यम / ஒரு நவரத்னா இந்திய அரசு நிறுவனம்

மின் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அறிவிப்பு (NIT) எண்: CON/Area-III/OTL/1122/09

காண்டாவர், பகுதி - III -இன் பல்வேறு கன்டெய்னர் முனையங்களில் தேவைப்படும் anti-spin வாக், Pad வாக்குகள் (அ) பிளாஸ்டிக் செக்யூரிட்டி Strip சீல்களுடன் கூடிய, ஒன்-டைம் வாக்குகளை (OTLs) வழங்குவதற்கு, ஆர்வமுள்ளவர்களிடமிருந்து மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்க கடைசி நாள்: 01.12.2022 அன்று 15.00 மணி வரை. (ஆ) 02.12.2022 அன்று 11.30 மணிக்கு ஆன்லைனில் மின் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

விரிவான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அறிவிப்பு (NIT) -க்கு concorindia.com / eprocure.gov.in ஆகிய இணையதளங்களில் உள்ளுமையலாம். விரிவான மின் ஒப்பந்தப்புள்ளி ஆவணம் பெறவும், ஆன்லைனில் சமர்ப்பிக்கவும் tenderwizard.com/CCIL இல் பதிவு செய்யவும். திருத்த அறிவிப்பு / பின்னிணைப்பு ஏதேனும் இருப்பின், சமர்ப்பிக்கும் கடைசி நாளுக்கு முன்பே இணையதளங்களில் வெளியாகும். ஏதாவது விளக்கத் தெளிவுபெற, 044-26482192 என்ற தொடர்பு எண்ணை (அ) M/s ITI Ltd-011-49424365 -யை அணுகி, ஆன்லைனில் சமர்ப்பிக்கலாம் (அ) sr.ro@concorindia.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம்.

முதன்மைப் பொது மேலாளர், பகுதி – III

MTNL - STPI IT SERVICES LTD
(A JV Company of MTNL and STPI under Govt. of India)
No.5, Rajiv Gandhi Salai, Taramani ,Chennai-600 113.
Tele: 044-39103 438 Fax: 044-39103505

NOTICE INVITING E-TENDER

Tender No: MSITS/CHE/DCI /2022-23/01 Date : 11.11.2022

MSITS Chennai invites E tender from eligible bidders for the following

I	Name of the work	E-Tender for Supply, Installation, Testing and Commissioning of Non-Computing Resources as per Tier-III standard at MSITS Ltd in Chennai
II	Bid Submission End date & Time	01.12.2022, 03.30 PM
III	Tender Opening Date & Time	02.12.2022, 03.30 PM

For more details & submission of E-tender, kindly refer CPP portal
www.eprocure.gov.in

CEO-MSITS Ltd

சுந்தரம் – கிளேட்டன் லிமிடெட்
பதிவு அலுவலகம் : ''சைதன்யா'', எண். 12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600006, இந்தியா. தொலைபேசி : 044 - 2833 2115; தொலைநகல் : 044 - 2833 2113.
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com; இணையதளம் : www.sundaram-clayton.com
CIN: L35999TN1962PLC004792

நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு

நிறுவன விண்ணப்பம் CA(CAA)/61(CHE)/2022

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்

சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் மற்றும் டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும் அவைகளின் முறையே பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடைமிலான கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில்

சுந்தரம் கிளேட்டன் லிமிடெட்
1956ம் ஆண்டு நிறுவன சட்டத்தின்படி
CIN : L35999TN1962PLC004792 உடன் நிறுவப்பெற்றது
''சைதன்யா'', எண்.12, காதர் நவாஸ் கான் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600 006, இந்தியா
என்ற முகவரியில் பதிவு அலுவலகம் கொண்டுள்ளது

...நிறுவனம் / பரிமாற்றும் நிறுவனம் / பிரிக்கப்பட்ட நிறுவனம் / SCL

நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களுக்கான கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு பிரசுரம்

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், 2022 நவம்பர் 09ம் தேதியன்று மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (''தீர்ப்பாயம்'') பிறப்பிக்கப்பட்ட (''தீர்ப்பாய ஆணை'') ஆணையால், நிறுவனங்களின் சட்டம் 2013 (''சட்டம்'') பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான விதிகளின் கீழ், சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் (''நிறுவனம்'') மற்றும் டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (''நிறுவனம்'') மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும் அவைகளின் பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடையிலான உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில் (''திட்டம்'') கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்கும் தேவைக்காக நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களுக்கான கூட்டத்தை நடத்திட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தீர்ப்பாயத்தின் ஆணையின்படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்தின் பிணை பெறாது கடனளித்தவர்களுக்கான கூட்டமானது (''கூட்டம்'') வருகின்ற 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 12.00 மணிக்கு (இந்திய நேரப்படி), காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக மேற்சொன்ன சட்டத்தின் பொருந்தத்தக்க விதிகள் மற்றும் இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் (கடமைகளை பட்டியலிடல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்தல்) ஒழுங்காற்று முறைகள் 2015 மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் (MCA)ன் பொருந்தத்தக்க சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டு, அல்வறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக நடைபெறவுள்ளது என்பதை அறியவும்.

தீர்ப்பாயத்தின் ஆணை மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும், மேற்சொன்ன கூட்டத்துக்கான அறிவிப்பு மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியன நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களின் தூதஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்சொன்ன சட்டம் பிரிவு 230 மற்றும் 232 – மற்றும் – பிரிவு 102 மற்றும் இதர பொருந்தக்கூடிய ஏற்பாடுகள் – மற்றும் – நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016ன் விதி எண் 6 (''CAA விதிகள்'')ன் கீழ் திட்ட விபர நகல், அறிக்கை மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றை நிறுவனத்தின் இணையதளம் www.sundaram-clayton.com, மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் கூட்டம் நடத்துவதற்கான இதர வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட முகமையாக செயல்படும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)ன் இணையதளம் www.evoting.nsdl.com, பங்கு பரிவர்த்தனைகளுக்கான இணையதளம் அதாவது பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com மற்றும் தேசிய பங்கு பரிவர்த்தனை நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளலாம் / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விரும்பினால், மேற்சொன்ன சட்டம் பிரிவு 230 மற்றும் 232 – மற்றும் – பிரிவு 102 மற்றும் CAA விதிகளின் விதி 6ன் கீழான திட்ட விபர நகல், அறிக்கை ஆகியவற்றின் காகித வடிவ நகலை இலவசமாக நிறுவனத்தின் பதிவு பெற்ற அலுவலகத்திலிருந்தோ அல்லது நிறுவனத்தின் மின்னஞ்சல் முகவரி corpsec@sundaramclayton.comக்கு மின்னஞ்சல் அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

தீர்ப்பாயம் திரு. N.P. விஜய் குமார், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்தின் தலைவராகவும், திரு. R. ராஜேஷ், வழக்கறிஞர் அவர்களை மேற்சொன்ன கூட்டத்துக்கான ஆய்வாளராகவும் செயல்படுவார்.

இதன் மேற்குறிப்பிட்ட திட்டம், நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களால் அங்கீகரிக்கப்பட்டால், அது தீர்ப்பாயத்தின் பின்னிட்ட அனுமதி மற்றும் ஒழுங்காற்று மையம் அல்லது இதர அதிகார அமைப்புகளின் (தேவைப்படும் பட்சத்தில்) இதர அங்கீகரிப்புகள், அனுமதிகள் மற்றும் இசைவுகளுக்கு கட்டுப்பட்டது.

நிறுவனத்தின் பிணை பெறாது கடனளித்தவர்கள் அறிவிப்பில் உள்ள அறிவுரைகளை பின்பற்றி, கூட்ட தேதிக்கு முன்பே தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலமோ அல்லது மின்னணு வாக்களிப்பு மூலமாக கூட்டத்திலோ தங்களது வாக்குகளை அளிக்கலாம். கூட்டமானது காணொளி காட்சி மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் மூலமாக நடைபெறுவதால், நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களின் நேரடி பங்கேற்புக்கு விலக்களிப்பட்டுள்ளது. ஒரு உறுப்பினர், தனது வாக்களிப்பு உரிமையை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையில் செலுத்திய பிறகு இக்கூட்டத்தில் பங்கேற்கலாம். ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதியில்லை.

மேற்சொன்ன கூட்டத்திற்கான மின்னணு வாக்களிப்புக்கான கடைசி தேதி மற்றும் தொலைதூர மின்னணு வாக்களிப்புக்கான நேர விபரம் கீழ்க்கண்டவாறு :

பிணை பெறாது கடனளித்தவர்களுக்கான கூட்டம்	
மின்னணு மூலம் வாக்களிக்க வேண்டிய பிணை பெறாது கடன் அளித்தவர்களின் பட்டியல் வரையறுக்கப்பட்ட தேதி	அக்டோபர் 31, 2022 திங்கட்கிழமை
தொலைதூர மின்னணு வாக்களிப்பு தொடங்கும் தேதி மற்றும் நேரம்	டிசம்பர் 13, 2022 செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி (இந்திய நேரப்படி)
தொலைதூர மின்னணு வாக்களிப்பு முடிவுறும் தேதி மற்றும் நேரம்	டிசம்பர் 15, 2022 வியாழக்கிழமை மாலை 05.00 மணி (இந்திய நேரப்படி)

மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு தொலைதூர மின்னணு வாக்களிப்பு அனுமதிக்கப்பட மாட்டாது. மேலும் இதன் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு, NSDLஆல் தொலைதூர மின்னணு வாக்களிப்பு செயல்முறை செயலிழப்பு செய்யப்படும்.

வரையறுக்கப்பட்ட தேதியன்று அதாவது அக்டோபர் 31, 2022 – திங்கட்கிழமை நிலவரப்படி, நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ள பிணை பெறாது கடனளித்த நபர்கள் மட்டுமே, இந்த அறிவிப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் மீது தனது வாக்களிப்பு உரிமையை செயலுறுத்தவும், கூட்டத்தில் பங்கேற்கவும் தகுதியுடையவராவார். பிணை பெறாது கடனளித்தவர்களுக்கான வாக்களிப்பு உரிமையானது, வரையறுக்கப்பட்ட தேதியான அக்டோபர் 31, 2022 – திங்கட்கிழமையன்று நிறுவனத்தால் செலுத்தப்பட வேண்டிய நிலுவையாக உள்ள தொகையின் விகிதாச்சார வீதத்திலானது. பிணை பெறாது கடன் அளித்தவர்களின் வாக்களிப்பு உரிமையானது, வரையறுக்கப்பட்ட தேதியன்று நிறுவனத்தில் நிலுவையில் உள்ள தொகைக்கு விகிதாச்சார வீதத்திலானது.

மின்னணு வாக்களிப்பு தொடர்பான விபரங்கள் கோரப்படுமாயின், நிறுவனத்திற்கு பிணை பெறாது கடனளித்தவர்கள் பின்வரும் தொடர்பு விபரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Ms பல்லவி மாத்ரே, மேலாளர் / திரு. அமித் விஷால், உதவி துணை தலைவர்,
நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட்,
டிரேட் வேர்ல்டு, ஏ விங், 4வது தளம், கமலா மில்ஸ் கம்பவுண்டு, லோயர் பரேல், மும்பை –400013,
மின்னஞ்சல் முகவரி : www.evoting.nsdl.com; தொடர்பு எண்கள் : 1800 1020 990 / 1800 224 430

ஏதேனும் இதர விபரம் தொடர்பான விசாரணைகளுக்கு, பிணை பெறாத கடனளித்தவர்கள் பின்வரும் தொடர்பு விவரங்களை குறித்துக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. ஸ்ரீராம் S, பொது மேலாளர்,
இண்டகிரேட்டட் ரெஜிஸ்ட்ரீ மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்,
2வது தளம், கென்சஸ் டவர்ஸ், எண்.1, ராமகிருஷ்ணா தெரு,
வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை – 600 017
மின்னஞ்சல் : srirams@integratedindia.in
தொலைபேசி : 044-2814 0801-03; தொலைநகல் : 044-2814 2479

ஒப்பம்/–
திரு. N. P. விஜய் குமார்,
நிறுவனத்தின் கூட்டத்திற்காக
தீர்ப்பாயத்தினால் அமர்த்தப்பட்ட தலைவர்

இடம் : சென்னை
தேதி : 14.11.2022

வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம் : ''சைதன்யா'', எண். 12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு - 600006, இந்தியா. தொலைபேசி : 044 - 2833 2115; தொலைநகல் : 044 - 2833 2113.
மின்னஞ்சல் : corp.secretarial@yahoo.com
CIN: U51100TN2021PTC146623

நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு

நிறுவன விண்ணப்பம் CA(CAA)/61(CHE)/2022

நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான சட்ட பிரிவுகள் விவகாரத்திலும்

சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் மற்றும் டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும் அவைகளின் முறையே பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடைமிலான கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில்

வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
2013ம் ஆண்டு நிறுவன சட்டத்தின்படி
CIN : U51100TN2021PTC146623 உடன் நிறுவப்பெற்றது
''சைதன்யா'', எண்.12, காதர் நவாஸ் கான் சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு – 600 006, இந்தியா
என்ற முகவரியில் பதிவு அலுவலகம் கொண்டுள்ளது

...நிறுவனம் / பரிமாற்றும் நிறுவனம் 2

நிறுவனத்தின் பிணை பெற்று கடனளித்தவர்களுக்கான கூட்டம் நடத்தப்படுவதற்கான அறிவிப்பு பிரசுரம்

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், 2022 நவம்பர் 09ம் தேதியன்று மாண்புமிகு நிறுவனங்களின் தேசிய சட்ட தீர்ப்பாயம், சென்னை அமர்வு (''தீர்ப்பாயம்'') பிறப்பிக்கப்பட்ட (''தீர்ப்பாய ஆணை'') ஆணையால், நிறுவனங்களின் சட்டம் 2013 (''சட்டம்'') பிரிவு 230 முதல் 232 வரை மற்றும் இதர பொருத்தமான விதிகளின் கீழ், சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் (''நிறுவனம்'') மற்றும் டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் வி எஸ் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் (''நிறுவனம்'') மற்றும் சுந்தரம் கிளேட்டன் டிசிடி லிமிடெட் மற்றும் அவைகளின் பங்குதாரர்கள் மற்றும் கடன்தாரர்களிடையிலான உத்தேசிக்கப்பட்டுள்ள கூட்டு ஏற்பாடு திட்ட விவகாரத்தில் (''திட்டம்'') கலந்தாலோசித்து, தக்கதென கருதும் பட்சத்தில் அதனை மாற்றங்களுடனோ அல்லது மாற்றமின்றியோ அங்கீகரிக்கும் தேவைக்காக நிறுவனத்தின் பிணை பெற்ற கடனளித்தவர்களுக்கான கூட்டத்தை நடத்திட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தீர்ப்பாயத்தின் ஆணையின்படியும் மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும் நிறுவனத்திற்கு பிணை பெற்று கடனளித்தவர்களின் கூட்டமானது (''கூட்டம்'') வருகின்ற 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 16ம் தேதி வெள்ளிக்கிழமையன்று பிற்பகல் 02.00 மணிக்கு (இந்திய நேரப்படி), காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / ஒளி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக மேற்சொன்ன சட்டத்தின் பொருந்தத்தக்க விதிகள் மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சகம் (MCA)ன் பொருந்தத்தக்க சுற்றறிக்கைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டு, அல்வறிவிப்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிகளுக்காக நடைபெறவுள்ளது என்பதை அறியவும்.

தீர்ப்பாயத்தின் ஆணை மற்றும் அதில் வழிகாட்டப்பட்டவாறும், மேற்சொன்ன கூட்டத்துக்கான அறிவிப்பு மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியன பிணை பெற்று கடனளித்தவர்களுக்கு தூதஞ்சல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

மேற்சொன்ன சட்டம் பிரிவு 230 மற்றும் 232 – மற்றும் – பிரிவு 102 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் – மற்றும் – நிறுவனங்கள் (சமரசங்கள், ஏற்பாடுகள் மற்றும் ஒருங்கிணைப்புகள்) விதிகள் 2016ன் விதி எண் 6 (''CAA விதிகள்'')ன் கீழ் திட்ட விபர நகல், அறிக்கை மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்கள் ஆகியவற்றை இணையதளம் www.sundaram-dayton.com, மின்னணு வாக்களிப்பு வசதி மற்றும் கூட்டம் நடத்துவதற்கான இதர வசதிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட முகமையாக செயல்படும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL)ன் இணையதளம் www.ev